**செய்தி வெளியீடு எண்: 33/2022** **நாள்: 04.05.2022**

**பத்திரிக்கை செய்தி**

**முதல் மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கலில் வெற்றிபெற்ற 30 பயணிகளுக்கு மார்க் மெட்ரோ நிறுவனத்தின் சார்பாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்**

சென்னை மெட்ரோ இரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ.1 லட்சம் மதிப்பிலான பரிசு கூப்பன் அல்லது பரிசு பொருள் வழங்கப்படும் என்று சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் அறிவித்திருந்தது. அதன்படி மார்ச் 21-ம் தேதி முதல் ஏப்ரல் 20-ம் தேதி வரை பயணம் செய்த பயணிகளுக்கான மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் 21.04.2022 அன்று கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளின் முன்னிலையில் நடைபெற்றது.

முதல் மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கலில் (மார்ச் 21-ம் தேதி முதல் ஏப்ரல் 20-ம் தேதி வரை) தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பயணிகளுக்கு மார்க் மெட்ரோ நிறுவனத்தின் சார்பாக பரிசுகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.05.2022) கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), திரு. டி. அர்ச்சுனன் (திட்டங்கள்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட மார்க் மெட்ரோ உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட திட்டங்கள், பயணிகளை ஊக்குவிக்கவும், பயனளிக்கவும் சென்னை மெட்ரோ இரயிலில் பயணிகள் தங்களது பயணத்தை தொடர்ந்து பயணிக்கவும் அடுத்த மாதமும் தொடரும். அடுத்த மாதத்திற்கான குலுக்கல் (21.04.2022 – 20.05.2022) மே 21, 2022 அன்று நடத்தப்படும். இந்த பரிசு விவரங்களை மேலும் தெரிந்துகொள்ள அனைத்து மெட்ரோ இரயில் நிலைய கட்டுப்பாட்டாளர்களை அணுகலாம். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மார்க் மெட்ரோ உடன் இணைந்து இந்த பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் - திட்ட விவரங்கள்**;

1. சென்னை மெட்ரோ இரயிலில் ஒரு மாதத்தில் அதிகபட்சமாக பயணம் செய்த முதல் 10 பயணிகள்.
2. **மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல்** - மாதம் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.1500/- மற்றும் அதற்கு மேல் பணம் செலுத்திய 10 பயணிகள், மற்றும்
3. **மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல்** - சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயண அட்டையை வாங்கி அதில் குறைந்தபட்சத் தொகையான ரூ.500/-க்கு டாப் அப் செய்த 10 பயணிகள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**